இலங்கை ராணுவத்தின் அத்துமீறல்களைக் கண்டிப்பது இந்தியாவின் தார்மீகக் கடமை

15 ஜூன் 2006

என்ன பிரச்னை?

1. இந்தியாவின் அண்டைநாடான இலங்கையில் 1980 களிலிருந்தே இனப்படுகொலைகள் நடந்துவருகின்றன.
2. இலங்கை ராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட போர்நிறுத்தம் காரணமாக இடையில் ஓரளவுக்கு அமைதி நிலவியது.
3. 2006-ம் வருடத்திலிருந்து low-intensity conflict எனப்படும் கைகலப்பு இலங்கை ராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்து வருகிறது.
4. இலங்கை ராணுவமும் அதன் ஆளுகையில் செயல்படும் கூலிப்படைகளும் கடந்த மூன்று மாதங்களில் அப்பாவி சிவிலியன்கள் மீது கடுமையான தாக்குதல் நடத்தி வருகின்றன.
5. தமிழகத்துக்கு வரும் இலங்கை அகதிகளின் எண்ணிக்கை கடந்த நான்கைந்து மாதங்களில் 3,000 ஐத் தாண்டிவிட்டது. தினமும் அகதிகள் வந்தவண்ணம் உள்ளனர்.
6. அப்பாவி சிவிலியன்கள் கொலையில் தங்களுக்கு எந்தப் பங்கும் இல்லை என்று இலங்கை ராணுவம் மறுக்கிறது. விடுதலைப் புலிகள்தாம் காரணம் என்று அவர்கள்மேல் பழி சுமத்துகிறது.
7. ஆனால் ஆம்னெஸ்டி இண்டெர்நேஷனல் போன்ற அமைப்புகள் இந்தக் கொலைகளில் இலங்கை ராணுவத்தின் பங்கு உள்ளது என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன.

என்ன தீர்வு?

1. இந்திய அரசு உண்மையை அறிந்துகொள்ள இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய 'உண்மை அறியும் குழு'வை உடனடியாக இலங்கைக்கு அனுப்பிவைக்கவேண்டும்.
2. அப்பாவி சிவிலியன்கள் இலங்கை ராணுவத்தால் கொல்லப்படுவதை இந்திய அரசு வன்மையாகக் கண்டிக்கவேண்டும்.
3. இலங்கையில் அமைதி நிலவ இந்திய அரசு ஆவண செய்யவேண்டும்.
4. இலங்கையிலிருந்து இந்தியா வரும் தமிழ் அகதிகளுக்கு கண்ணியமான முறையில் வாழத் தேவையான அத்தனை வசதிகளும் ஏற்படுத்தித் தரவேண்டும்.
5. முக்கியமாக, உணவு, உறைவிடம், உடைகள் தவிர்த்து அகதிச் சிறுவர்களுக்குப் படிப்பு வசதி, வேலைவாய்ப்பு வசதி ஆகியவற்றை ஏற்படுத்தித் தரவேண்டும்.

விரிவாக்கம்

1980 களில் தொடங்கி இந்தியாவின் அண்டைநாடான இலங்கையில் பெரிய அளவில் இனக்கலவரங்கள் நடந்துவருகின்றன. அப்பொழுதிலிருந்தே இலங்கையின் தமிழ் இன அகதிகள் புகலிடம் தேடி இந்தியாவுக்கு வருகின்றனர். இடையில் போர்நிறுத்தம் காரணமாக அப்பாவிப் பொதுமக்கள்மீதான தாக்குதல்கள் குறைந்திருந்தாலும் 2006-ம் ஆண்டின் தொடக்கம் முதலே இலங்கை ராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மீண்டும் போர் மூளத்தொடங்கியுள்ளது. அதைத்தொடர்ந்து கடந்த சில மாதங்களில் 3000-க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளனர்.

உலகெங்கிலும் பல இடங்களில் உள்நாட்டுப் பிரச்னைகள் ஆயுதம் தாங்கிய போர்களாக மாறியுள்ளன. ஏன்? இந்தியாவில்கூட பல ஆயுதம் தாங்கிய குழுக்கள் தம் போராட்டத்தைத் தொடர்கின்றன. ஆனால் வெகு சில இடங்களில்தாம் ஒரு நாட்டின் ராணுவம் அப்பாவி மக்கள்மீது கொலைவெறித் தாக்குதல்களை நிகழ்த்துகிறது. அவ்வாறு நடக்கும்போது உலக நாடுகள் அனைத்துமே ஓங்கிக் குரல் கொடுத்து அம்மாதிரியான நிகழ்வுகளுக்கு தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றன.

கடந்த சில வருடங்களில் உலகில் பல இடங்களில் இனப்படுகொலைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. ருவாண்டா, சோமாலியா, சூடான், கிழக்கு தைமூர் போன்ற நாடுகளில் ஓர் இனம் மற்றொரு இனைத்தை அல்லது இனக்குழுவைத் தாக்கிக் கொன்றுவந்ததை இந்திய ஊடகங்கள் நம் மக்களுக்கு எடுத்துச் சொல்லியுள்ளன. பல செய்தித்தாள்களும் காட்டமான தலையங்கங்களை எழுதியுள்ளன.

ஆனால் நம் பக்கத்து நாட்டில் அந்நாட்டின் ராணுவம் அப்பாவிப் பொதுமக்கள்மீது நடத்திவரும் அட்டூழியத்தினை இந்திய ஊடகங்கள் கண்டுகொள்வதே இல்லை.

உலக அளவில் மதிக்கப்படும் ஆம்னெஸ்டி இண்டெர்நேஷனல், இலங்கையின் மனித உரிமை ஆணையகம், பிபிசி செய்திகள், தமிழ்நெட் போன்ற விடுதலைப் புலிகள் ஆதரவுத் தளங்கள் ஆகியவற்றில் இருந்து திரட்டிய செய்திகளின் ஆதாரத்தில் இந்தத் தொகுப்பு வெளியிடப்படுகிறது.

திரிகோணமலை தாக்குதல்கள், **12-16** ஏப்ரல் **2006**

- ஆயுதம் தாங்கிய சிங்களக் கூட்டம் திரிகோணமலையில் 20 பேர்களைக் கொன்று மேலும் அதிகப்படியானோரைக் காயப்படுத்தியது. கொல்லப்பட்டவர்களில் 7 பேர் பெண்கள்.

தகவல் ஆதாரம்: Human Rights Watch இணையத்தளச் சுட்டி
http://hrw.org/english/docs/2006/04/25/slanka13262.htm

புத்தூர் படுகொலை, **18** ஏப்ரல் **2006**

- மூன்று சக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்த ஐந்து பேர் இலங்கை

ராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அவர்களது பெயர் மற்றும் வயது:

1. மஹாதேவன் கிஷோர்குமார், 20
2. செல்லப்பு கமலதாசன், 25
3. பாலசுப்ரமணியன் கண்ணதாசன், 27
4. தங்கராஜா கவீந்திரன், 27
5. கந்தசாமி கவுரிபாலன், 32

மாந்துவில் கிழக்கு கடத்தல், **6** மே **2006**

· கோயிலுக்குச் சென்ற 8 ஆண்கள், கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். அவர்களது நிலை என்ன என்று இதுவரை தெரியவில்லை.

1. ராசநாயகம்பிள்ளை சிவானந்தமூர்த்தி, 35
2. மார்க்கண்டு புஷ்பகாந்தன், 26
3. கந்தசாமி பரிமேலழகன், 29
4. வைகுந்தவாசன் வைகுந்தகுமார், 22
5. ரத்தினம் தயாரூபன், 19
6. பொன்னம்பலம் பார்த்திபன், 22
7. செல்வரத்னம் சிவானந்தம், 22
8. ராமச்சந்திரன் ராசகுமார், 22

தகவல் ஆதாரம்: ஆம்னெஸ்டி இண்டெர்நேஷனல் இணையத்தளச் சுட்டி
http://web.amnesty.org/library/Index/ENGASA370152006

அல்லைப்பிட்டி படுகொலை, **13** மே **2006**

· அடையாளம் தெரியாத சிலர் செல்லத்துரை அமலதாஸ் என்பவரது வீட்டில் புகுந்து சுட்டதில் வீட்டில் இருந்த 8 பேர் கொலை செய்யப்பட்டனர். இதில் நான்கு மாதக் குழந்தையும், நான்கு வயதுக் குழந்தையும் அடங்கும்.
· 13, 14 மே இரண்டு நாள்களில் மட்டும் 18 அப்பாவி சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தகவல் ஆதாரம்: ஆம்னெஸ்டி இண்டெர்நேஷனல் இணையத்தளச் சுட்டி
http://web.amnesty.org/library/Index/ENGASA370142006

வங்காலை படுகொலை, **8** ஜூன் **2006**

· கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் அனைவரும் கொலை செய்யப்பட்டு சுருக்கிட்டுத் தொங்க விடப்பட்டிருக்கின்றனர். சிறு குழந்தைகள் இருவரும் வயிறு அறுக்கப்பட்டு உள்பாகங்கள் வெளியே தெரித்து விழுமாறு வதைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் தாய் பாலியல் வல்லுறவுக்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறார்.

கொல்லப்பட்டவர்கள்:

1. மூர்த்தி மார்ட்டின், 35
2. மேரி மேடலைன், 27
3. ஆன் நிக்சன், 7 (படம் கீழே)
4. ஆன் லுக்சிகா, 9 (படம் கீழே)

தகவல் ஆதாரம்: பிபிசி செய்தி http://news.bbc.co.uk/2/hi/south_asia/5062704.stm
படம்: http://www.tamileelamnews.com/news/publish/tns_5431.shtml

இதுவரையில் 100 க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் இலங்கை ராணுவத்தாலோ அல்லது அவர்களது கைக்குள் இருக்கும் பாராமிலிட்டரி படைகளாலோ கொல்லப்பட்டிருக்கின்றனர்.

இந்திய நாடாளுமன்ற, தமிழக சட்டமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கு:

இலங்கை பிரச்னை தொடர்பாக தமிழக சட்டமன்றத்திலோ இந்தியா நாடாளுமன்றத்திலோ கடந்த சில வருடங்களில் விவாதங்கள் ஏதும் நடைபெறவில்லை. மத்திய அரசின் வெளியுறவு அமைச்சகமும் இலங்கைக்கான இந்தியத் தூதரும் இலங்கை நிலவரத்தைக் கவனமாகப் பரிசீலித்து வந்தாலும் மத்திய அரசு நாடாளுமன்றத்தில் அறிக்கைகள் எதையும் சமர்ப்பிக்கவில்லை. தற்போதைய மன்மோகன் சிங் அரசு பதவியேற்ற நாள் முதலாக இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக அரசின் நிலை என்ன என்பதை இதுவரையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் விளக்கிச் சொல்லவில்லை.

தமிழக சட்டமன்றத்தில் தமிழகத்துக்கு வரும் அகதிகள் தொடர்பாகவும் அவர்களது நல்வாழ்வு பற்றியும் எந்த விவாதமும் இதுவரையில் நடைபெறவில்லை. சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார் (விடுதலைச் சிறுத்தைகள்) ஆனந்த விகடன் இதழில் ராமேஸ்வரம் அகதிகள் முகாமில் அகதிகளின் நிலையைப் பற்றி எழுதியதைப் படித்ததால் முதல்வர் கருணாநிதி மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதாகச்

சொல்லியிருக்கிறார். சட்டமன்றத்தின் பிற உறுப்பினர்களும் தத்தம் தொகுதிகளில் உள்ள அகதிகள் முகாம்களுக்குச் சென்று உண்மை நிலையை அறியவேண்டும்.

பாமக நிறுவனர் பா.ராமதாஸ், மதிமுக தலைவர் வை.கோ, விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அடங்கிய 'உண்மை அறியும் குழு' ஒன்றை இலங்கைக்கு அனுப்ப வேண்டியுள்ளனர். இதனை அவசரமாகச் செயல்படுத்த அனைத்து கட்சிகளும் முன்வரவேண்டும்.

இந்தியா இலங்கையில் அமைதியை ஏற்படுத்த ஆவண செய்யவேண்டும்.

இலங்கை ராணுவத்தால் நடத்தப்படும் இனப்படுகொலைகளைக் கட்டாயமாக நிறுத்தவேண்டும் என்று இலங்கை அரசைக் கண்டிக்கவேண்டும்.

விடுதலைப் புலிகள், இலங்கை அரசு ஆகிய இரண்டு பக்கத்தையும் பேச்சுவார்த்தைக்கு வருமாறு வலியுறுத்தி அமைதியை நிலைநாட்ட முயற்சி செய்யவேண்டும்.

பத்ரி சேஷாத்ரி
bseshadri@gmail.com
98840-66566